## தமிழ்நாட்டையும் தமிழ்த்தாய் வாழ்த்தையும் அவமதித்து அத்துமீறும்

# ஆளுநரைக் கண்டித்து தமிழ்நாடு முழுவதும் ஆர்ப்பாட்டம்!





சைதையில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தலைமையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, தயாநிதி மாறன் எம்.பி., துணை அமைப்புச் செயலாளர்கள் ஆஸ்டின், தாயகம் கவி, மாவட்டச் செயலாளர்கள் மயிலை த.வேலு, நே.சிற்றரசு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்தியூர் செல்வராஜ், இரா.கிரிராஜன், கனிமொழி என்.வி.என்.சோமு மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்.



ஒருங்கிணைந்த கடலூர் மாவட்ட கழகம் சார்பில் , தமிழ்நாட்டில் அத்துமீறும் ஆளுநரையும், அவரைக் காப்பாற்றும் அ.தி.மு.க., பா.ஜ.க. கள்ளக் கூட்டணியைக் கண்டித்தும் கண்டன ஆர்ப்பாட்டம், கடலூர் தலைமை தபால் நிலையம் அருகில் கழக தேர்தல் பணிக்குழு செயலாளர் இள.புகழேந்தி தலைமையில் நடைபெற்றது. மாநகர கழக செயலாளர் கே.எஸ்.ராஜா ,கடலூர் மேற்கு மாவட்ட அவைத்தலைவர் டாக்டர் கொ.நந்தகோபாலகிருஷ்ணன்,முன்னாள் எம்.எல்.ஏ., துரை கி.சரவணன் முன்னிலை வகித்தனர். வட்ட,ஒன்றிய,நகர,பேரூர் கழக நிர்வாகிகள்,சார்பு அணி நிர்வாகிகள் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கழகத்தினர் கலந்துகொண்டனர்.



சிவகங்கை அரண்மனை வாசல் முன்பாக சிவகங்கை மாவட்ட கழகத்தின் சார்பில் ஆளுநரின் போக்கினை கண்டித்து முன்னாள் அமைச்சர் மாநில இலக்கிய அணி புரவலர் மு.தென்னவன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் மாவட்ட கழக துணைச் செயலாளர் த.சேங்கைமாறன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார், சிவகங்கை நகர் கழக செயலாளர் சி.எம்.துரை. ஆனந்த், காரைக்குடி மாநகர துணை மேயர் என் குணசேகரன் உட்பட ஒன்றிய நகர கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.



தமிழ்நாட்டில் அத்துமீறும் ஆளுநரையும் அவரைக் காப்பாற்றும் அ.தி.மு.க., பா.ஜ.க கள்ளக் கூட்டணியையும் கண்டித்து தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் சங்கரன்கோவில் தபால் நிலையம் முன்பு நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் முன்னாள் அமைச்சர் தங்கவேலு தலைமையில் செயற்குழு உறுப்பினர்கள் சீனிவாசன், பரமகுரு, மாவட்ட அவைத் தலைவர் பத்மநாபன், மாநில மருத்துவர் அணி துணைச் செயலாளர் செண்பக விநாயகம், மாநில வர்த்தக அணி இணை செயலாளர் முத்துச்செல்வி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. நிகழ்வில் மாவட்ட பொருளாளர் சரவணன், துணை செயலாளர் புனிதா, மனோகரன், ராஜதுரை, ஒன்றிய செயலாளர்கள் லாலா சங்கர பாண்டியன், பூசைத்துரை, பெரியதுரை, வெள்ளத்துரை, கிறிஸ்டோபர், ராமச்சந்திரன், பால்ராஜ், சேர்ம துரை, நகர செயலாளர்கள் பிரகாஷ், அந்தோணிசாமி,பேரூர் செயலாளர் மாரிமுத்து,குருசாமி, ரூபி பாலசுப்பிரமணியன் மற்றும் அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், நிர்வாகிகள்,உள்ளாட்சி பிரதிநிதிகள்,வார்டு கழக, கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள்,கழக முன்னோடிகள் உள்பட 500 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாட்டில் அத்துமீறும் ஆளுநரையும் அவரைக் காப்பாற்றும் அ.தி.மு.க.பா.ஜ.க. கள்ளக் கூட்டணியையும் கண்டித்தும் தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் ரயில் நிலையம் அருகில் மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமையில் முன்னாள் அமைச்சர் பூங்கோதை ஆலடி அருணா, தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார்,மாநில மருத்துவ அணி இணைச் செயலாளர் கலைகதிரவன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.நிகழ்வில மாவட்ட பொருளாளர் ஷெரிப், துணை செயலாளர்கள் கென்னடி, கனிமொழி, தமிழ்ச்செல்வன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் செல்லத்துரை, சேசுரா ஜன், சேக்தாவுது, முத்துப்பாண்டி, ஆறுமுகச்சாமி, பொதுக்குழு உறுப்பினர்கள் சமுத்திரபாண்டியன், கதிர்வேல், அருள், இராஜேஸ்வரன், கரீம், தமிழ்ச்செல்வி, ஒன்றியச் செயலாளர்கள் செல்லத்துரை, சிவன்பாண்டியன், திவான் ஒலி, சீனித்துரை, அன்பழகன், ரவிசங்கர், அழகு சுந்தரம்,மாரி வண்ணமுத்து,ஜெயக்குமார்,நகர செயலாளர்கள் சாதிர், கணேசன், வெங்கடேசன் மற்றும் அனைத்து சார்பு அணி களின் அமைப்பாளர் கள்,நிர்வாகிகள், பேரூர், கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகி கள்,உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடி கள் உள்பட 1000 த்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.



மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் தமிழ்த்தாய் வாழ்த்தை புறக்கணித்த ஆளுநர் ஆர்.என்.ரவியைக் கண்டித்து மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. ஆலோசனையின்படி உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் பொன்.முத்துராமலிங்கம், மாநில தணிக்கை குழு உறுப்பினர் வ.வேலுசாமி, உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் பெ. குழந்தைவேலு ஆகியோர் முன்னிலையில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. உடன் கழக நிர்வாகிகள் தனச்செல்வம், ஒச்சு பாலு, சின்னம்மாள், மூவேந்திரன் , முருகவேல், இளைஞர் அணி சௌந்தர்ராஜன், பகுதிச் செயலாளர் மதி வெங்கடேஷ் மற்றும் பகுதி கழக வட்டக் கழக செயலாளர் மண்டல தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாட்டில் அத்துமீறும் ஆளுநரையும் காப்பாற்றும் அ.தி.மு.க., பா.ஜ.க. கள்ளக் கூட்டணியையும்கண்டித்து தேனி வடக்கு மாவட்டம் தேனி பழைய பேருந்து நிலையத்தில் வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. உடன் நகரச் செயலாளர் நாராயண பாண்டியன் மற்றும் ஒன்றிய செயலாளர்கள், நகர செயலாளர்கள், பேரூர் செயலாளர் , சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாட்டையும் தமிழ்த்தாய் வாழ்த்தையும் தொடர்ந்து அவமானப்படுத்தும் ஒன்றிய அரசின் ஏஜெண்ட்டாக செயல்படும் ஆளுநரைக் கண்டித்து தி.மு.க. சார்பில் திருச்சி மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன் தலைமையில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் சபியுல்லா, மாநில அணி அமைப்பாளர் கவிஞர்சல்மா முன்னிலையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் மாவட்ட கழக தலைவர் கோவிந்தராஜ் மாவட்ட கழக பொருளாளர் குணசேகரன் பகுதி கழகச் செயலாளர் ராஜ்முஹம்மது மற்றும் மாநில, மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்டம் ,வார்டு, கிளைக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கழகத் தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டனர்.